செ.வெ.எண்.515/2021 நாள் - 10.11.2020

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு கல்வி கடன் முகாமை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, ஆவின் பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தென்காசி.எஸ்.ஜவஹர்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு கல்வி கடன் முகாமை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, ஆவின் பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தென்காசி.எஸ்.ஜவஹர்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வகித்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற சிறப்பு கல்வி கடன் முகாமில் 270 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இதனடிப்படையில் 113 விண்ணப்பங்கள் வழங்கிய மாணவர்களுக்கு ரூ.4.05 போடி கல்வி கடன் வழங்கப்பட்டது. மேலும் 151 விண்ணப்பங்கள் நடவடிக்கையில் உள்ளது. இம்முகாமில் வரபெற்ற விண்ணப்பங்களில் 6 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது. இச்சிறப்பு முகாமில் 20 வங்கிகள் கலந்து கொண்டனர். மேலும் கல்வி கடன் பெற்றுள்ள மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி கொண்டு நன்றாக படிக்க வேண்டும். மேலும் மாணவ, மாணவியர்கள் அனைவரும் வாழ்வில் மெம்மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.அருண்பாண்டியன், பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர் திரு.மாமல்லன், இந்தியன் வங்கி முதுநிலை மேலாளர் திரு.இராஜசேகர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மேலாளர் திரு.நடராஜன், பேங்க ஆப் பரோடா முதுநிலை மேலாளர் திரு.சந்தோஷ் மற்றும் வங்கியாளர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.